**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை . 1ம்பிரதிவாதி ஆஜர். 2ம் பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.488/2020

பி.வா.சா.1 மைனாவதி க/பெ பரமசிவம்

<u>வாதி தரப்பில்குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. 2ம் பிரதிவாதி எனக்கு அண்ணன் முறை ஆகும். அவருக்கு எனது பூமி பக்கத்திலே அவருக்கும் பூமி உள்ளது. அவர் எனது பூமியை ஒட்டிவருகிறார். எனது பூமி மேல்புறம், வாதி பூமி கீழ்புறம் ஆகும். வாதி தன்னுடைய பூமியின் மேல்புற அத்தில் கம்பி வேலி போட்டு உள்ளார் என்றால் சரிதான். கம்பிவேலி போடப்பட்டது 2016ம் ஆண்டு என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் சுமுகமான உறவு இல்லை என்பதால் 2019ல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கபட்டது என்றால் சரிதான்.

2. என்னுடைய பூமியில் கிழக்கு ஓரத்தில் தென்வடலாக 4 அடி ஆழத்தில் பள்ளம் உள்ளது என்றால் சரிதான். அந்த பள்ளம் வாதி அமைத்த கம்பிவேலியை ஒட்டியே உள்ளது என்றால் சரிதான். மேற்படி பள்ளம் இந்த வழக்கு போடப்படுவதற்கு முன்பாக 2020பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3. கம்பிவேலிமை ஒட்டி பள்ளம் இருந்தால் பிடிப்பு இல்லாமல் விழுந்துவிடும் என்றால் சரிதான். பள்ளம் தோண்டப்பட்டதால் கம்பிவேலி விழுந்துவிட்டது என்றால் முதலிலே பள்ளம் இருந்தது. வாதி பூமியில் உள்ள தென்வடல் கம்பிவேலி கீழே விழவேண்டும் என்னத்தல் எனது பூமியில் வேலியை ஒட்டி ஜேசிபி கொண்டு 4 அடி ஆழம் பள்ளம் பறித்துவிட்டேன் என்றால் பறிக்கவில்லை. அவ்வாறு பறிக்கபட்டதால்தான் வேலி விழுந்துவிட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே பள்ளம் இருந்திருந்தால் கம்பிவேலியை அமைத்து இருக்க முடியாது என்றால் சரியல்ல.

4. வாதி என் தந்தை சொத்தை விலைக்கு வாங்கியபோதிலிருந்து அந்த பூமியில் எனக்கு விலைக்கு கொடுக்க சொல்லி தகராறு செய்துவந்தேன் என்றால் சரிதான். வாதி குடும்பத்தை அநாகறிமாக பேசுவது பலவகையில் தொந்தரவு செய்துவந்தேன் என்றால் சரியல்ல. 2016 அமைக்கப்பட்ட கம்பிவேலி எங்களுக்கு பலவகையில் இடையூறாக இருந்ததால் அதை சாய்த்துவிட வேண்டும் என்பதற்காக பள்ளம் பறிக்கப்பட்டது என்றால் சரியல்ல.
5. வாதி பூமியில் தண்ணீர் தொட்டி உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்த்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் தண்ணீர் தொட்டி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. 08.03.2020 வாதி அவருடைய மகன் மகேஷ், நண்பர் கார்த்திகேயன் ஆகிய மூவரும் தாவா சொத்திற்க்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.
6. நடந்த சம்பவத்தை எல்லாம் வீடியோ எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாமோதிரன் இன்று நீதிமன்றத்திற்க்கு வரவில்லை. தாமோதிரன், பழனிசாமி ஆகியோர் சேர்ந்து மகேஷ் மற்றும் கார்த்திகேயனை தாக்கி கார் முன்பக்க கண்ணாடியை உடைத்ததாக அரச்சலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.
7. 2020ல் கம்பி வேலி விழுந்துவிட்டது என்றால் சரிதான். விழுந்தகம்பி அப்படியே உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பூமிக்கு நான் சென்று வருகிறேன். விழுந்த கம்பியை பழையமாறி அமைப்பதற்கு 2020ம் ஆண்டு மே மாதம் வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. வேலி அமைக்கவிடமாட்டோம் என்று வந்த ஆட்களை அடித்துதுரத்தி விட்டோம் என்றால் எனக்கு தெரியாது. விழுந்துள்ள வேலி சுமார் 300 அடி இருக்குமா என்றால் எனக்கு தெரியாது.
8. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படமான வா.சா.7 ஆவணத்தில் புடுங்கப்பட்ட கம்பிவேலி மற்றும் பறிக்கப்பட்ட வாய்க்கால் ஆகியவை தெரிகிறதா என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட வா.சா.7 ஆணத்தில் புதிதாக மண் பறிக்கப்பட்டு போடப்பட்டுள்ளது அது தெரிந்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜேபிசி மண்ணை தோண்டியபோது இடிக்கப்பட்ட தொட்டி தெரிகிறது என்றால் தொட்டியே

அங்கு கிடையாது. எனது பூமியில் வாதி பூமியை ஒட்டி பள்ளம் தோண்ட அவசியமே இல்லை என்றால் முதலிலே இருந்தே வடிகால்வாய்க்கால் இருந்தது.

9. முதலிருந்தே அந்த வாய்க்கால் இருந்தது அது எப்போது இருந்து இருந்தது என்ற விபரங்களை என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். வேலியின் மதிப்பு ரூ.2,00,000/-ம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. வாதி பூமியை ஒட்டி சேதம் விளைவிக்கும் வன்னம் பள்ளம் தோண்டுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் என்னுடைய பூமியில் தண்ணீர் வடிவதற்காக பள்ளம் தோண்டியிருந்தால் 10 அடி தள்ளிதோண்டி இருக்கலாம் என்றால் முதலிருந்தே வாய்க்கால் உள்ளது. முதலிருந்தே வாய்க்கால் உள்ளதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாதிகளுடைய பூமியில் குறுக்காக கீழமேலாக எங்கள் பூமியில் இருந்து கழிவுநீர் வடிய கழிவுநீர் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான்.

10. எனது பூமியில் கழிவுநீர் வடிய வாய்க்கால் தேவைப்பட்டு இருந்தால் கிழமேலாக தான் அமைத்து இருப்பேன் என்றும் தென்வடலாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் 30 வருடத்திற்கு முன்பே இருந்தது. நான் திட்டமிட்டு வேலி விழவேண்டும் என்பதற்காக பள்ளம் பறித்ததை மறைக்க முன்பு இருந்ததாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதி அமைத்துள்ள முள்வேலியால் கிழமேல் கழிவுநீர் வாய்க்காலில் தண்ணீர் செல்வதில் எந்த இடையூறும் இல்லை என்று ஆணையர் தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் நீதிமன்ற ஆணையர் வரும்போது வாய்க்காலில் தண்ணீரும் வரவில்லை, மழையும் வரவில்லை. வாதி தன் பூமியை அனுபவிப்பதிலும் நான் இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல.

11. வாதி தன்னுடைய வேலி அமைப்பதற்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் மேற்கே இருந்து கிழக்கே போகும் தண்ணீரை வாணியைவிட்டு போட்டுக்கொள்ளலாம். வாதி அப்படி விட்டுதான் வேலி அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதி சொத்தை ஒட்டி தோண்டியுள்ள 4 அடி ஆழ வாய்க்காலை மூடகடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மூடதயாராக நான் இல்லை. என்னுடைய என்னமே வாதிக்கு தொந்தரவு கொடுப்பதால்தான் அந்த வாய்க்காலை மூடமாட்டேன் என்று வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

12. வாதியின் அத்திலிருந்து 5 அடி தூரத்திலிருந்து குழிபறித்தோ வேறு வகையில் இடையூறு செய்யவோ எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் செயல்பாடுகளால் வாதி அடைந்த மனவேதனை மற்றும் சிரமம் மிக அதிகம் என்றால் சரியல்ல. நான் பொறுப்பு இல்லை. வேலிக்கு ஏற்பட்ட சேதம், வாதிக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் ஆகியவற்றிக்கு கேட்டுயிருக்கக்கூடிய ரூ.1,00,000/- இழப்பீடு குறைவானது என்று சொன்னால் சரியல்ல. பொய்எதிர்வாதம் செய்கிறேன் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்று சொன்னல் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை